02.12.2024

அசல் வழக்கு எண்: 117/2022

வா.சா.1 சாட்சி வேல்ராஜா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

நானும் 1ம் பிரதிவாதியும் ஏற்படுத்திகொண்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**23.05.2018ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது மனைவி பெயரில் உள்ள சமையல் எரிவாயுவிற்கான ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சமையல் எரிவாயு ரசீதுகள் (10 எண்ணம்) வா.சா.ஆ. 2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மின் கட்டண ரசீதுகள் (18எண்ணம்) வா.சா.ஆ. 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் பிரதிவாதி மீது திருநகர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுக்களை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மேற்படி ஆவணங்கள் ஒளி நகலாக இருப்பதால் குறியீடு செய்ய முடியாது என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்களின் அசல் ஆவணங்கள் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதால் மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மை குறித்து ஆவணங்களின் மதிப்பீட்டலின் போது முடிவு செய்யப்படும் என்ற அடிப்படையில் 14.04.2022ம் தேதியிட்ட புகார் மனு நகல் வா.சா.ஆ. 4 ஆகவும், 21.04.2022ம் தேதியிட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் தாவா சொத்தில் குடி இருப்பதை காட்டகூடிய புகைப்படங்களை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புகைப்படங்கள் (4 எண்ணம்) வா.சா.ஆ. 6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

1ம் பிரதிவாதி எனக்கு எழுதிகொடுத்த உறுதிமொழி பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.03.2019ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத உறுதிமொழி பத்திரம் வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)